1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மாவட்டந்தோறும் கல்வெட்டு ஆராய்ச்சிப் பணி தொல் பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்போது இவ் விவரங்கள் அரசுக்குத் தெரிவிக்கக்கூடும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே பல இடங்களிலே பலபுராதனக் கல்வெட்டுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அண்மையிலே குன்னூர் பகுதியிலே ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக அங்கிருந்த புராதன கல்வெட்டுக்கள் சீர் கெட்டிருப்பதாக அறியப்படுகிறது. அதனைச் சீர் செய்வதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்தப் பணியை ஆரம்பித்து நாம் நடத்தி வருகிறோம். அதன்படி நீலகிரி மாவட்டத்தில் அந்தப் பணி துவக்கப்படும்பொழுது அதுகுறித்து ஆராயப்படும். உடனடியாகச் செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்குமானால் அதுகுறித்து அரசு ஆலோசிக்கும்.

செஞ்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.

*வினா எண் 10 — திரு. செஞ்சி இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செஞ்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் எண்ணம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) புதிதாக ஒரு தொழிற் பயிற்சி நிலையம் செஞ்சியில் ஆரம்பிக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு தற்போது இல்லை.

திரு. செஞ்சி இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற செஞ்சிப் பகுதியில் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் அவசியம் என்கிற காரணத்தால் இனிமேலாவது அதை ஏற்படுத்த அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்குச்செலவு அதிகமாக ஆகிறது என்ற ஒரு காரணத்தாலும், இதுவரையில் தொழிற் பயிற்சி பெற்ற 32,325 பேர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்று வேலை வாய்ப்பு அகங்களின் புள்ளி விவரங்கள் சொல்கின்ற காரணத்தாலும், புதிதாகத் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கும் எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை.

கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள பாலங்கள்.

*வினா எண் 11—திரு. சென்னை மு. அரங்கநாதன் மாண்புமிகுஉள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவல்லிக்கேணித் தொகுதியில் லாயிட்ஸ் சாலையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே உள்ள பாலத்தையும் லேடி வெலிங்டன் உயர்நிலைப் பள்ளிக்குக் குறுக்கே உள்ள பாலத்தையும் அகலப் படுத்த உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்தது லாயிட்ஸ் சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே என்ற வார்த்தை. ஆனால் இதிலே கூவத்தின் குறுக்கே என்று தவறாகப் போட்டிருக்கிறார்கள். லாயிட்ஸ் காலனியின் குறுக்கே கூவமே போவதில்லை.

இரண்டாவதாக, அந்தக் கெனாலுக்குக் குறுக்கே இருக்கிற லேடி வெலிங்டன் கல்லூரிக்கும், ஆரம்ப உயர்நிலைப் பள்ளிக்கும் இடையிலே இருக்கின்ற பாலம் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. 24, 12, போன்ற பஸ்கள் நிற்கும் நிலையம் அங்கே இருக்கிறது. அது மிகவும் நெரிசலான இடம். இதுபற்றி போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களிடத்தில் கூட மகஜராகக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: கேள்வியாகத்தான் கேட்கிறேன். அதுவும் போக்குவரத்திற்கு நெரிசலான இடம். இதையும் கொடுத்திருக்கிறேன். அதைப்போல சீரணிக்கு